RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2436

OPEN ACCESS

# உடலரசியல் என்னும் பெண்ணிய அரசியல்: சுகிர்தராணி கவிதைகள்

ம. செந்தில்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ், கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, சென்னை-106 தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Politics as Body Politics: Poems of Sukirtharani

M. Senthilkumar [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: senthikumarm@gmail.com

Received: 16-03-2024
Revised: 04-07-2024
Accepted: 11-07-2024
Published: 17-07-2024

**ABSTRACT**

Society is filled with possessive characteristics. Through the technological revolution society has undergone many stages of development. Today, women dominate in various fields. However, it is seen that the writings of women writers are seen through the lens of culture in literature. According to Malathi Maithri, it is on the basis that female letters are read by God's eyes. Women are depicted as wrapped in cultural blankets. Women are repressed and unable to speak openly about their sexuality. Their characteristics are gentleness, modesty, peace and good manners. Women's writings should not be sexualized like men's; if they do, women will become enemies of culture. But the idea that Andal has overcome this situation in her songs is also seen. They are not considered in today's devotional literature as they have been raised to the status of gods. In the background of the rise of feminist ideas, the writings of women have acquired new dimensions and have been developing. Writers who embrace feminist ideas tend to practice writing sexuality. Obscurity means losing their freedom. So speaking openly, literaizing sexuality, and writing the body have taken on dimensions today.

**Keywords:** Society, Dimensions, Sukirtharani, Women domination

## முன்னுரை

சமூகம் என்பது நிலவுடைமைப் பண்புகளைக் கொண்டதாகவே இன்றும் காணப்படுகிறது. தொழில்நுட்ப புரட்சியின் ஊடாக சமூகம் வளர்ச்சி கட்டங்கள் பலவற்றைக் கடந்திருக்கிறது, இன்று பல்வேறு துறைகளில் பெண்கள் கோலோச்சுகிறார்கள். எனினும் இலக்கியங்களில்பெண் அடங்கிய பாத்திரமாக பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்கள் கலாச்சார கண்ணாடி கொண்டு பார்க்கப்படும் நிலைதான் காணப்படுகிறது. கடவுளின் கண்களால் வாசிக்கப்படும் பெண் எழுத்துக்கள் என்ற அடிப்படையில்தான் இருக்கின்றன என்கிறார் மாலதி மைத்ரி. பண்பாட்டு போர்வை போர்த்தப்பட்டவர்களாக பெண்கள் சித்திரிக்கப்படுகிறார்கள். பாலியலை வெளிப்படையாகப் பேசும் வாய்ப்பற்றவர்களாக பெண்கள் அடக்கி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய பண்புகள் மென்மை, அடக்கம், சாந்தி, நன்னடத்தை என்பனவாகவே இருக்கின்றன. பெண்களின் எழுத்துக்களில் ஆண்களைப் போல பாலியல் வந்து விடக் கூடாது அவ்வாறு வந்து விட்டால் அப் பெண்கள் பண்பாட்டுக்கு எதிரியாகி விடுவார்கள். ஆனால் இந்த நிலைமையை ஆண்டாள் தன் பாடல்களிலேயே புறந்தள்ளி விட்டாள் என்ற கருத்தும் காணப்படுகிறது. தெய்வ நிலைக்கு உயர்த்தி விட்டதால் அவற்றை இன்றைய பக்தி இலக்கியமாகக் கொள்வதில்லை. பெண்ணியச்

சிந்தனைகள் மேலெழுந்து வந்த பின்னணியில் பெண்களின் எழுத்துக்கள் புதிய பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சி பெற்று வந்துள்ளன. பெண்ணியச் சிந்தனைகளை உள்வாங்கிய எழுத்தாளர்கள் பாலியலை எழுதுதல் என்ற போக்கினைக் கடைபிடிக்கின்றனர். ஒளிவுமறைவு என்பது அவர்கள் சுதந்திரத்தை இழக்கச் செய்யும். எனவே வெளிப்படையாக பேசுதல், பாலியலை இலக்கியமாக்குதல், உடலை எழுதுதல் என்பனவாக இன்று பரிமாணம் பெற்றுள்ளன.

## பெண்ணியமும் உடலரசியலும்

உடல் என்பது பெண்ணைப் பற்றியதாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால் அனைத்து மனிதர்களையும் இன்றைய சமூகம் உடல்களாக வகைப்படுத்தி வைத்துள்ளனர். பாலினமாக, சாதியாக, இனமாக, மதமாக, தொழிலாளியாக, முதலாளியாக இன்னும் பலவாக வகைப்படுத்தப்பட்ட உடல்களே அரசின் கண்காணிப்பில் இருக்கின்றன. பெண்களின் உடலரசியல் என்பது உடலை எழுதுதல் என்பதாக மாறுகிறது. தொடக்க கால எழுத்தாளர்கள் பெண்களுக்கு அறிவுரை கூறும் வகையில்தான் இலக்கியங்களைப் படைத்தனர் என்பதைக் காணமுடிகிறது "வேதநாயகம் பிள்ளையின் ஒரு பாடலில் ஒரு நல்ல பெண்ணைத் திருமணத்துக்காகத் தேர்வு செய்யப் போகும் நபர் திரும்ப வந்து தான் கண்டு வந்த பெண்ணின் குணநலன்களை விவரிப்பார். அவள் அழகானவள், பணக்காரக் குடும்பப் பெண், படித்தவள், நாகரிகமானவள், அவள் ஒரு பகுத்தறிவுவாதியும் கூட ஆனால் பணம், நகை இவற்றில் ஆசை வைக்காதவள், வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்யக் கூடியவள். கணவன் வேறு ஒரு பெண்ணை நாடினால் மட்டுமே அவள் கோபம் கொள்வாள். இன்னும் ஒரு தன்மையையும் பாடல் கூறுகிறது. கணவன் நிதமும் அவளை அடித்தாலும் அவள் அவனை வணங்குவாள். அவளை அடிப்பதால் அவன் கரம் வலிக்கும் என்பாள். நல்முத்துப் போன்ற பெண் அவள்" (அம்பை, உடலெனும் வெளி, ப.16) என்ற கூற்று நல்ல பெண் பற்றிய சித்திரத்தை தொடக்க கால எழுத்தாளர்கள் தம் இலக்கியங்களில் வருணித்தனர். இதன் மூலம் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அறிவுரைகளையே வழங்கினர் என்று கூறுகிறார். பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படையாகக் கூறக் கூடாது என்பதே ஆணாதிக்கச் சமூக விழுமியமாக இன்றைக்கும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவேதான் "கற்பு என்ற கற்பனையின் அடிப்படையிலானது இம்மனத்தடை தன் விருப்பத்தையும் போதாமையையும் சொன்னால் தன்னை வேறுமாதிரியாக இழிவாக நினைக்கலாம் என்ற அச்சம். ஆண் விரும்பும் போது மறுத்தால் அவன் வேறு பெண்ணை நாடிச் சென்று விடுவான் என்ற கலக்கம்." (லதா, கழிவறை இருக்கை, ப.15) என்ற கூற்றினால் இதனை விளங்கலாம். மேலும் பாலியல் என்பது ஆணாதிக்கச் சமூகத் தில் ஆணின் உள்ளுணர்வுகளுக்குத் தக்கவாறு பெண்ணின் உடல் இசைவிக்கப்படுகிறது எனக் கூறலாம். அதன் மூலம் ஆண், பெண் பாலுறவைச் சமூக மயமாக்குவது தொடர்கிறது. இந்த பாலியல் உறவில் பெண்ணின் உடல் ஆணின் பாலியல் நாட்டத்திற்கேற்ப புனைவாக்கப்பட்டு உள்ளது" (அரங்க.மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.77) என்ற கருத்தும் இதனை அணி செய்கிறது. ஆணினால் இயக்கப்படுகிற ஒன்றாகவே பெண்ணுடல் இருக்கிறது. அவளுடைய போதாமை மற்றும் விருப்பங்களை வெளிப்படுத்த தடை இருக்கிறது. எனவேதான் பெண் எழுத்துக்களில் சமீப காலங்களில் பெண்ணியச் சிந்தனைகள் மிகுந்து காணப்படுகின்றன. பாலியலை எழுதும் விருப்பத்தை வெளிப்படையாக செய்கின்றனர்.

## சுகிர்தராணி கவிதைகள்

பண்பாட்டு தளத்தில் இயங்கும் பல எழுத்தாளர்கள் தம் அடையாளத்தை மறைத்துக் கொள்ள விரும்புவார்கள். உயர்குடியினராகக் கருத வேண்டும் என்பதற்காக அவ்வாறான பாவனைகளை உருவாக்கிக் கொள்வர். ஆனால் சுகிர்தராணி தன் அடையாளத்தை ஒருபோதும் மறைத்திருக்கவில்லை. மாறாக தன் குடிப்பிறப்பைப் பற்றி வெளிப்படையாகவே கூறுகிறார். இந்த சாதியில் பிறந்தவள் என்பதை ஊக்கத்துடன் கவிதையில் பதிவு செய்கிறார். மாட்டுக்கறி சாப்பிடும்

சாதியினர் என்பதை அறிவிக்கிறார். மாலதி மைத்ரி, குட்டி ரேவதி, லீனா மணிமேகலை போன்று பாலியலைத் தன் எழுத்துக்களில் சீர்மை குன்றாத வகையில் வெளிப்படுத்தியவர் சுகிர்தராணியாவார். அவருடைய கவிதைகள் சிற்றிதழ்களான காலச்சுவடு, உயிர் எழுத்து, உயிர்மை, தீராநதி போன்றவற்றில் வெளியாகியிருக்கின்றன. ஏழு கவிதைத் தொகுப்புகள் தனித்தனியாகவும் அவை மொத்தமாகத் தொகுக்கப்பட்ட தொகுப்பாகவும் வெளிவந்துள்ளன. இரவு மிருகம், தீண்டப்படாத முத்தம், காமத்திப்பூ, இப்படிக்கு ஏவாள், அவளை மொழி பெயர்த்தல், நீர் வளர் ஆம்பல் என்பன போன்ற இவருடைய கவிதைகள் தமிழ் இலக்கியச் சூழலை அசைவுக்கு உள்ளாக்கியது என்பர். இக்கவிதைகளின் உள்ளடக்கம், சாதிய ஒடுக்கத்திற் கெதிராகவும், பாலின ஒடுக்குமுறைக்கு எதிராகவும், பண்பாட்டுத்திணிப்புகளுக்கு மாற்றாகவும் அமைந்துள்ளன. பெண்ணின் இயல்பான மனித உணர்வுக்கு மதிப்பளித்தல் என்பதைத் கவிதைகள் பேசுபொருளாக்கியுள்ளன.

## உடலை எழுதுதல்

பெண்ணை வர்ணித்தல் என்பது ஆண்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் போல தமிழ் இலக்கியத்தில் அங்க அங்கமாக வர்ணிக்கப்படுகின்றனர். அது போல ஆணின் தேகம் வர்ணிக்கப்படுவதில்லை. பெண்கள் எழுத்தில் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தொடக்க காலப் பெண் எழுத்தாளர்கள் உரிமைக்குரல் எழுப்பினார்கள் அன்றி ஆண்களைப் போல எழுதும் வாய்ப்புப் பெற்றவர்களாக இல்லை. “பாலியல் சம்பந்தப்பட்ட சொற்களை ஆண்கள் வெளிப்படையாகவே பயன்படுத்துகின்றனர். பெண்கள் பயன்படுத்துவதில்லை. பெண்கள் பாலியல் சம்பந்தப்பட்ட சொற்களைப் பேசுவது அவர்களுக்கு இழுக்குத் தரும் என்பது சமூகம் அவர்கள் மீது விதித்த மரபு கட்டாகும். பெண்களும் இதனடிப்படையில் பாலியலைப் பற்றிப் பேசவும் அது சம்பந்தமான சொற்களை எடுத்தாளவும் (கல்வி மற்றும் மருத்துவம் நிமித்தமாகக் கூட) தயங்குகின்றனர்” (இரா.பிரேமா, பெண்ணியம் ஆழமும் அகலமும், ப.866) என்னும் கூற்றில் பெண்களுக்கு வழங்கப்படும் பேச்சு சுதந்திரம் அல்லது பயன்படுத்த அனுமதிக்கப்படும் சொற்கள் பற்றி எடுத்துரைக்கிறார் இரா.பிரேமா. உடலை எழுதுதல் என்னும் போக்கு 90களுக்குப் பிந்தைய சூழலில் உருவானதாகும். “90களில் எழுதத் தொடங்கிய பெண் கவிஞர்களில் பெரும்பாலானோர் சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத பெண்ணின் கனவையும் நசிவையும் வலியையும் எழுதத் துவங்கியதன் மூலம் பெண்ணின் குரலால் அவள் இருப்பை மொழி வெளிக்குள் நிலைப்படுத்தினர். பல பெண் படைப்பாளிகள், பெண்ணியம், உடலரசியல், பாலரசியல், தலித்தியம், உலகமயமாதல் மற்றும் சுற்றுச் சூழல் போன்ற அரசியல் கருத்தாக்கச் சொல்லாடல் வழியாக மொழியையும் அதன் சமூகக் கலாச்சார ஆணாதிக்க அதிகார கட்டுமானங்களையும் உடைக்கத் துவங்கியுள்ளனர்” (மாலதி மைத்ரி, நம் தந்தையரைக் கொல்வதெப்படி, ப.33) என்ற கூற்றினால் இதனை விளங்கலாம். மாலதி மைத்ரி, குட்டி ரேவதி, கிருஷாங்கினி, லீனா மணிமேகலை, பிருந்தா போன்றோரின் கவிதைகள் பெண் உடலை மையப்படுத்தின. தம் இருப்பினை, உணர்வெழுச்சியை எழுதுதல் என்ற அடிப்படையில் இயங்கினர், சுகிர்தராணியின் கவிதைகளிலும் இத்தகைய பாங்கினைக் காணமுடிகிறது.

## சுகிர்தராணியின் கவிதைகளில் உடலரசியல்

பெண்ணின் உணர்வெழுச்சிகள் பரந்துபட்டவை. ஆணின் உணர்வெழுச்சிகள் பாராமுகமானவை என்ற பொதுவான நிலையில் அணுகப்படுகின்றன. ஆணால் எளிதாக அணுகப்படுகிற ஒரு நிகழ்வு அல்லது செய்தி பெண்ணால் கடுமையாகப் பார்க்கப்படுகிறது. பாலுணர்ச்சியை வெளிப்படுத்துதல், உடல் தேவையைக் கூறுதல், பாலுறவு குறித்த தன் விருப்பத்தைக் கூறுதல் என்பன பெண்ணால் வெளிப்படையாகக் கூறக் கூடாதனவாக இருக்கின்றன. ஆனால் சுகிர்தராணியின் கவிதைகள் இதனை தகர்க்கின்றன.

“மொழியற்ற அவஸ்தையில்

கிளர்ந்தடங்கும் எனை மீட்க

யாரேனும் உண்டா

உண்டெனில்

என் கழிந்த இளமையும்

கூடிய வயதும்

நினையாதிரு

மரந்துளிர்த்த சாலையோரம்

கைப்பற்றி என் கனவுகேள்

மனமொடிந்த பொழுதெல்லாம்

திகட்டும் வரை

உன் தோள் கொடு

விளக்கணைத்த பின்னிரவில்

இமை மீறும் கண்ணீரை

சுட்டுவிரலால் துடைத்து விடு

மறுதலித்த வாழ்க்கைக்கு

என் பிரதியென

உன் முகம் காட்டு

இத்தனைக்கும் சம்மதமெனில்

தயவு செய்து

தப்பர்த்தம் கொள்ளாதே

புணர்ச்சிக்கு

அழைக்கிறேனென்று" (சுகிர்தராணி கவிதைகள், ப.31)

என்னும் கவிதையில் ஒருபெண் தன் வலியைக் கூற முற்பட்டாலே அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள பார்க்கும் ஆணின் மனநிலையை தோலுரித்துக் காட்டுகிறார். தோழமையாய் பழகுதல் என்பது இன்று அரிதாய்ப் போனது. ஆணுடன் பெண் சிரித்துப் பேசினாளே அவள் அவனோடு உறவுக்குத் தயாராகி விட்டாள் என்ற மனநிலைதான் காணப்படுகிறது. சமூகமும், ஊடகங்களும் இவ்வாறான பிம்பத்தை உருவாக்கி வைத்துள்ளன. எனவே ஒரு பெண் ஏதேனும் ஒரு உதவியைக் கேட்க முற்படும் போது அவளை புணரும் விருப்பத்தை உடனே தெரிவித்து விடும் ஆணின் வக்கிரம் வெளிப்படுகிறது. இத்தகைய வக்கிர மனநிலையைத்தான் இக்கவிதை முகத்தில் அறைவது போல எடுத்துரைக்கிறது.

பெண்ணெனும் பிறப்பே பழியைச் சுமக்கக் கூடியதாக மாறிப் போனது அதாவது தன் அடையாளத்தை மறந்து பிற அனைத்தின் அடையாளத்தையும் பெற்றுக் கொள்கிறது. தான் என்ற தன்னிலை மறைந்து போகிறது.

"எதை எதைச் சுமக்க வேண்டியிருக்கிறது

பிறந்ததும்

பெண்ணென்ற பழித் துணியை

வளர்ந்த பின்

கக்கத்தில் இடுக்கிய தம்பியை

தொங்கிய கையில்

தூக்குச் சட்டியை

பருவம் கண்டதும்

கணவனை

உயரின் திரட்சியான

கர்ப்பத்தை

பிள்ளையை

பின் குடும்பத்தை

நெஞ்சிலும் வயிற்றிலும்

அவரவர் காலத்தில்

அவரவரைச் சுமந்து

உருமாறி விட்டன உறுப்புகள்

மூளியாகும் உடம்பை விட

காற்றுக்கும் மழைக்கும்

அழுத்தமாய் நிற்கும்

சுமை தாங்கிக் கல்லாய்ப்

பிறந்து தொலைக்கலாம்” (சுகிர்தராணி கவிதைகள், ப.51)

என்ற கவிதையில் ஒரு பெண் பிறந்தது முதல் வாழ்வில் தன்னை ஒரு சுமை தாங்கியாகவே கருதும் சமூக அமைப்பின் கட்டமைப்பைப் பற்றிக் கேள்வி கேட்கிறார். குழந்தையை, கணவனை, பழிச் சொற்களை என்று சுமந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய சுமைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உறுப்பைப் பெற்றுக் கொள்கின்றன. தோள், வயிறு, இடுப்பு, கால்கள், கைகள் உறுப்புகள் ஒவ்வொன்றும் சுமையை பெறுகின்றன. அது போதாதென்று பழிச் சொற்கள் வேறு. அதற்குப் பேசாமல் சுமைதாங்கிக் கல்லாய்ப் பிறந்திருக்கலாம் அஃறிணை பொருட்களை விடவும் கீழ்மையான வாழ்வை உடையது பெண்ணுடல் என்பது இதில் சுட்டிக் காட்டப்படுகிறது.

திருமணத்திற்கெனவே பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள் என்பதற்கு ஏற்ப பெண் பூப்பெய்தியதும் அவள் படிக்கின்ற வயதிலேயே திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள் என்னும் கருத்தினை,

“நாணம்

மொட்டவிழ

சமைந்த சடங்குக்கு

ஊர் கூடும்

பரிசம் போடும்

சம்பந்திப் பேச்சு

சதையை விலை பேசும்

முதல் நாள் மறந்த

வீட்டுப் பாடம்

அவள்

எழுதி முடியுமுன்

ஏறியே கிடக்கும்

கழுத்தில் தாலி

புழக்கடை சலசலக்கும்

புதிய வேர்களுடன்" (சுகிர்தராணி கவிதைகள், ப.52)

என்ற கவிதையில் ஒரு பெண் பதின்ம வயதில் பூப்பெய்துகிறாள். அப்போதே ஊர் கூடி சடங்கு நிகழ்த்துகிறார்கள். பூப்பெய்தும் வயதே அவளது திருமண வயதாகக் கருதும் போக்கு இன்றும் நிலவுகிறது. அவள் பக்குவம் அடையும் முன் பள்ளிப்பாடத்தை மனனம் செய்து கொண்டிருக்கும் அவளை வீட்டுப்பாடத்தை நினைவில் வைத்து செய்து முடிக்கும் முன் திருமணச் சந்தைக்கு கொண்டு வந்து நிறுத்தப்படுகிறாள். சதையை விலை பேசும் எத்தர்களான சமூகத்தினர். தாம் நினைத்ததை முடித்து விடும் வேகத்தில் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். புதிய இடத்தில் புழக்கடையைக் கூட்டவோ, பெருக்கவோ செய்யப் போகும் அப்பெண் தனக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கூட எண்ணிப் பார்க்கும் பக்குவத்தை அடைந்திருக்க மாட்டாள்.

## முடிவுரை

சுகிர்தராணியின் கவிதைகளில் பெண்ணின் பரிதவிப்புகள் அவளது உடல் அடையும் மாற்றங்கள், பெண்ணை ஆண்கள் பார்க்கும் பார்வை, திருமணச் சந்தையில் பெண்ணின் உடல் விலைபேசப்படும் நிலை, சுமை தாங்கியாக அனைத்தையும் சுமக்கும் இயல்பு ஆகியவற்றால் அவள் ஒரு மனித உயிரி என்ற நிலை மறக்கப்பட்டு பாலியல் பொருளாக, உற்பத்திக் கருவியாக, உணர்வுகளற்று பாலுறவுக்காக ஏங்குபவளாக மட்டுமே பார்க்கப்படும் பார்வையை தகர்க்கும் விதத்தில் கவிதைகள் எழுதியுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License